## ANNEXURE- I

## TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

### INSTRUCTIONS & GUIDELINES TO CANDIDATES APPLYING FOR DEPARTMENTAL EXAMINATIONS

(i) The Departmental Examinations (except General Educational Test of the S.S.L.C. Standard) are open to all persons, whether in Government Service or not, on payment of the prescribed fees. Persons in Government Service who are eligible under the existing rules to apply without paying the examination fee, should also pay the fee and may claim reimbursement of the fee from their offices.

(ii) The candidates who apply for any of the Departmental Examinations should have completed the age of 16 years on the date of this Notification

Registering On line application includes Generation of application No. after data entry and uploading of scanned image with photograph and signature.

1. The Examination Fee should be paid by postal receipt only. Candidates should make use of the facility of applying 'Online' through the Commission's Website with cost of Registration fee of Rs.30/- and Examination Fee Rs.50/- for each test, except the candidate opting for New Delhi as centre.

**(a)** Candidates should make sure that he/she has acquired the Postal Receipts obtained from anyone of the post offices listed in Annexure-III to the Commission's Notification for the requisite number of tests that he/she is applying for, before registering Online**. "CANDIDATES SHOULD NOTE THAT REGISTRATION FEE OF Rs.30/- ALONG WITH POSTAL CHARGE OF RS.12/- ALSO WILL HAVE TO BE INCLUDED TO THE TOTAL AMOUNT OF EXAMINATION FEE PRESCRIBED FOR THE TESTS APPLIED FOR AND SHOULD BE PAID THROUGH POSTAL RECEIPT ONLY, EXCEPT THE CANDIDATES OPTING NEW DELHI AS CENTRE''.**

(b) As regards New Delhi candidates, the examination fee should be paid only by crossed "Account Payee" Demand Draft obtained from any of the Scheduled / Nationalized Bank payable to the Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai – 600 003 at Chennai only.

**Instructions to candidates for applying through Online**.

1. Approach the internet browsing centers which has scanning facility also or NIC having image scanners.
2. Keep the Postal receipt for payment of fee obtained on or after the date of Notification and your passport size photograph ready, before going in for Online Registration.

3. The Examination fee, the Test code details, name of the Post Officers etc. are available in the Commission's website.
4. Duly fill the relevant columns of online application.
5. The postal receipt particulars should be furnished, while filling up the application clearly. (The Receipt No. entries made by the candidate will be matched with the data base received from the Post Office before admitting the application. Discrepancies found if any, will lead to rejection of application.)
6. Make a note of the auto-generated unique online Application No. displayed in the screen immediately on generating the Online Application.
7. Take a printout of the auto generated duly filled in Application form and Identification Certificate by presenting the Application No. and date of birth. After verifying the particulars for correctness tear off the blank portion of the Identification Certificate.
8. Paste your recent passport size photograph and affix signature in the respective boxes provided in the Identification Certificate.
9. Scan the Identification Certificate with Photo and signature and store it in a folder as a single image in JPG format.
10. Please ensure the size of the image not to exceed 20 kbs and within the resolution of 300 x 600 pixels with reasonably good quality image.
11. If the file size exceeds 20 kb, adjust the scanner settings suitably such as DPI resolution, Colors etc. during the process of scanning so as to reduce the file size (or) Ms Paint may also be used to resize the scanned image.
12. Upload the image in the website to complete the Online Registration. The application submitted without the photo and / or signature through online will be summarily rejected.
13. The Identification Certificate in original with photo and signature should get attested by immediate Superior Officer of your department along with the postal receipt pasted on the reverse should be taken to the examination hall and handed over to the Invigilator on the last day of the examination, you are appearing for.
14. Answer papers will be invalidated if you fail to handover the Identification Certificate at the examination hall.
15. No need to send the application printout or any other documents to the Commission's Office. Only Online submission of application is enough (except the candidates those who are applying for the II & III class language tests and SAS II(a), II(b), & II(c) tests and General Educational Test).

16. No physical Hall tickets will be sent to the candidates by the Commission individually by post.
17. Candidate's coming without downloaded hall ticket and physical Identification Certificate will not be permitted to write the examination.

**<u>NOTE:</u>**

Candidates have to confirm the submission of their application to the TNPSC. They can check the status of the application by giving their unique online Application number.

Commission is not responsible for any data transmission loss.

Candidate should preserve their unique online Application No

Any doubt in online application can get clarified with the Commission's GRC (1800 425 1002) and any other Commission's phone numbers also.

2. Centres of Examinations – The Departmental Examinations will be held at the following Centres:-

| Name of Centre | Code No | Name of Centre | Code No | Name of Centre | Code No |
|---|---|---|---|---|---|
| Ariyalur | 030 | Nagapattinam | 011 | Thiruvannamalai | 022 |
| Chennai | 001 | Nagercoil (Kanyakumari) | 119 | Tiruchirappalli | 025 |
| Coimbatore | 002 | Namakkal | 012 | Tirunelveli | 026 |
| Cuddalore | 003 | Perambalur | 014 | Thiruvallur | 021 |
| Dharmapuri | 004 | Pudukkottai | 015 | Thiruvarur | 023 |
| Dindigul | 005 | Ramanathapuram | 016 | Thoothukudi | 024 |
| Erode | 006 | Salem | 017 | Udhagamandalam | 013 |
| Kancheepuram | 007 | Sivaganga | 018 | Vellore | 027 |
| Karur | 009 | Thanjavur | 019 | Villupuram | 028 |
| Krishnagiri | 031 | Theni | 020 | Virudhunagar | 029 |
| Madurai | 010 | Tiruppur | 032 | New Delhi | 175 |

**<u>Note</u>**:-

(i). The candidates should write the examination only at the Head quarters of the District in which they are working, unless or otherwise they are specifically permitted by the Tamil Nadu Public Service Commission to write the Examination in any other Centre. This condition will not apply to the unemployed candidates and candidates employed in private concerns.

(ii) **CHANGE OF CENTRE**

The candidate will appear for the examination at the centre where he is employed. Only in exceptional circumstances, [i.e., transfer, training, deputations] candidates will be allowed for change of centre, provided requests for such changes are received in the Commission's Office within 15 days from the date of issue of Notification. Such requisition for the change of centre will have to be routed through the Head of Office or a certificate to that effect obtained from the competent authority should be attached. Applications for change of centre received in the Commission's Office after the prescribed period or not sent through the Head of Office or sent without proper certificate will not be considered.

(iii). A Candidate changing his place of examination without permission of the Tamil Nadu Public Service Commission shall have his examination annulled.

3. **DAYS AND DATES OF WRITTEN EXAMINATIONS**:- The Forenoon session will commence from 9.00 a.m. and the afternoon session will commence from 2-30 p.m. (Time table enclosed with notification)

4. **FEE**:- The fee payable for each of the tests included in the Departmental Examinations are given in the Annexure-II.

(i) Candidates are at liberty to apply for as many tests as the time table allows. If a candidate applies for two or more tests which are held at one and the same time, he/she will be permitted to write only one of the tests which may be decided by him/her, even though all the opted tests appear in the Memorandum of admission.

(ii) If, for any reason, the Commission is not satisfied as to the trustworthiness of a candidate's result, the candidate will be required to undergo examination in one or more of the subjects of the examinations for which he appeared and his success or failure will be determined on the result of such re – examination.

5. The syllabus, the maximum number of marks, the minimum number of marks required for a pass and the duration of the test are published in Part II--Section 2 (Supplement) of the Tamil Nadu Government Gazette, dated 18th December 1991 and dated 28th December 1997 and also in the Tamil Nadu Public Service Commission Bulletins, dated 16th July 1992, 16th November 1997 and dated 1st February 2002. The Hindu Religious and Charitable Endowments Administration Department Test will be conducted as per the orders issued by the Government in G.O.Ms. No.243, T.D. Culture & R.E. Department, dated 27th July 2000.

6. Candidates are allowed the option to answer the paper in all the tests either in English or in Tamil or partly in English and partly in Tamil, except the test on translation and the language test which have to be answered only in the language chosen by them in their applications.

7. **GENERAL EDUCATIONAL TEST** of the S.S.L.C. Std. The classes of persons mentioned in column (2) of Table below are eligible to apply for admission to the Examination for the purpose specified in the corresponding entry in column (3) subject to production of the certificate obtained from the authorities mentioned in column (4) thereof:--

**TABLE**

| Sl. No. | Classes of Person | Purpose | Competent authority to issue the Certificate |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | Members, who do not possess the Minimum General Educational Qualification, employed in any of the Subordinate Services. | To qualify for promotion or for transfer to other posts, for which the service rules prescribe M.G.E.Q | Head of the Department concerned. |
| 2. | Employees of Local Bodies, Corporations, Panchayats, Panchayat Unions, Municipalities and Town Panchayats. | To qualify for promotion or transfer to other posts for which Minimum General Educational Qualification is prescribed. | District Collector (P.D. Unit) or Commissioners / Divisional Development Officers concerned. |
| 3. | Employees of Board High Schools and Higher Secondary Schools. | To qualify for promotion or transfer to other posts for which Minimum General Educational Qualification is prescribed. | Chief Educational Officer, District Educational Officer of the District concerned. |
| 4. | Employees of Agricultural Marketing Committees. | - Do - | Secretary, Agricultural Marketing Committee. |
| 5. | Employees, who do not possess the M.G.E.Q., employed in the National Cadet Corps Units. | - Do - | Director, National Cadet Corps, Chennai. |
| 6. | Employees, who do not possess the M.G.E.Q., employed in Local Library Authorities. | - Do - | Chairman, Local Library Authority, Chennai. |
| 7. | Employees of State owned Corporations. | - Do - | Appointing authority concerned. |

**NOTE**: 1. The authority competent to issue the certificate in respect of persons employed in the Revenue Department, Commercial Taxes Department and Survey and Land Records Department shall be the Collector of the District, the Deputy Commissioner of Commercial Taxes concerned and the Deputy Director of Survey and Land Records, respectively.

2. The candidates who apply for GENERAL EDUCATIONAL TEST (SSLC STANDARD) should furnish the particulars along with certificate **of eligibility** duly attested by their Head of the Department in the format furnished below and handover the same to the Invigilator on the last day of the examination. Failure to do so will be liable for rejection of their application.

# **FORMAT**

| | |
|---|---|
| 1. Name of the Post held by him/her | |
| 2. Whether his/her services have been regularized or whether he has been appointed temporarily and the services to which he/she belong to. | |
| 3. Basic pay in the Post held by him/her. | |
| 4. Period of Service rendered so far in the Post. | |
| 5. Highest Educational Qualification (attested copy of Mark List to be enclosed) | |
| 6. Whether provincialised or non- Provincialised | |
| 7. Reason for which he/she has applied for admission to General Educational Test of the SSLC Standard. | |

Place: Signature with Designation

Office Seal

8.(i). The **SECOND CLASS LANGUAGE TEST (TAMIL),** is conducted for persons in Government Service and for persons aspiring for Government service, who have passed S.S.L.C. Public Examination, but have not studied Tamil as one of the Languages, or not studied the high school course in Tamil medium of instruction. The candidates who have passed the **Second Class Language Test** should bring and submit a copy of SSLC Mark List / T.C during the Viva.

(ii). The **THIRD CLASS LANGUAGE TEST (VIVA VOCE)** in Tamil/Telugu is conducted only for Assistant Curators in the Government Museum and in Hindi / Kannada / Malayalam / Telugu / Urdu for Probationary Sub-Registrars and Probationary District Registrars in the Registration Department. Hence the above candidates are directed to inform the details of their employment in the applications.

(iii) The candidates who satisfy the above conditions alone need apply for these tests and those who are not covered under the above categories are not eligible to apply for the test. The Applications if any, received from candidates other than that of the two categories mentioned above will be rejected summarily / or made ineligible for the said tests, as the case may be.

(iv) The candidates, who are applying for the **II and III class language test** should send the downloaded copy of applications with Identification Certificate immediately after uploading without fail to the Commission’s office.(Test Codes. 001 & 209, 210, 211, 212, 213, 214 & 215)

9. The candidates who are applying **for Subordinate Account Service Part II(a), II(b) and II(c)** are eligible only after passing SAS-Part I(a) and I(b). They should register the particulars regarding their status of the result. Failure to do so the application will be summarily rejected. (Test Codes.No.131, 148, 85, 115 & 164)

10. Blind candidates are alone to be permitted to write the Examination with the help of scribe. Others (i.e. Deaf, Dumb, Physically Challenged the scribe will not be provided)

(i) Differently Abled candidate will be seated in the Ground Floor in a separate room under the direct supervision of the Chief Invigilator. They will be allowed an hour extra time for writing the examination.

(ii) The Chief Invigilator have to arrange for the scribes and the scribes will be paid remuneration by the Commission.

(iii) Before the closure of the examination, the scribe will read what he has written in the answer book so as to ensure the correctness of the dictation. A declaration to this effect should be given by such candidates with thumb impression/signature.

(iv) Candidates who are unable to make use of their own hands due to any infirmity to hold the answer books or turn the pages for answering the questions are allowed the assistance of a mazdoor subject to the conditions that the candidate has to engage an uneducated mazdoor to hold the book and turn the pages at his own cost.

11. Any candidate who does not behave properly towards the Chief Invigilator / Invigilators of the Examination Halls / any other inspecting authority or any candidate resorting to malpractice of any kind will have his/her answer book invalidated. He/She is also liable to be debarred from appearing again for any of the examinations either permanently or for such term of years as the Commission may decide as fit. The same penalty will be imposed on any candidate who personally or by letter attempts to canvas or bring influence to bear on an examiner or Member of the Commission or its staff, in connection with the examination or on whose behalf such attempt is made by any relative, friend, patron/official or other persons. The above penalty will be imposed also in case where candidates make an appeal in their answer papers invoking sympathy of examiners in connection with their result.

12. Any communication intended for the Commission must be made in writing with the particulars of Application Number assigned to him, the centre chosen by him/her and the name of the test for which he/she has applied and the Register Number, if any assigned to him/her and addressed only to the Secretary. If a reply is sought, a self-addressed and sufficiently stamped envelope should be sent so as to comply with his/her request.

13. A candidate submitting an application to the Departmental Examinations will abide by all the rules in force.

**Controller of Examinations**

Website : www.tnpsc.gov.in
E-mail : coetnpsc.tn@nic.in
(Office) 044 –25300300
Fax No. 044 – 25300598
**Toll Free No: 1800 425 1002**

## இணைப்பு - 1

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

### துறைத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான குறிப்பு மற்றும் விதிமுறைகள்

அரசுப்பணியில் உள்ளவர்கள், இல்லாதவர்கள் அனைவருக்கும் (பொதுக்கல்வித் தகுதித் தேர்வு தவிர) துறைத் தேர்வுகள் பொதுவானவையாகும். உரிய கட்டணத்தைச் செலுத்தி இத்தேர்வுகளை எழுதலாம். நடைமுறையிலுள்ள விதிகளின்படி, தேர்வுக் கட்டணம் செலுத்தாமல் விண்ணப்பிக்கத் தகுதியுள்ள அரசுப்பணியாளர்களும் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். பின்னர், இத்தேர்வுக் கட்டணத்தை அவர்களுடைய அலுவலகங்களின் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) துறைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இவ்வறிவிக்கை நாளன்று 16 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

**<u>REGISTERING ON LINE APPLICATION INCLUDES GENERATION OF APPLICATION NO. AFTER DATA ENTRY AND UPLOADING OF SCANNED IMAGE WITH PHOTOGRAPH AND SIGNATURE.</u>**

1. விண்ணப்பதாரர்கள், தேர்வுக் கட்டணத்தை அஞ்சலக பற்றுச் சீட்டாக மட்டுமே செலுத்த வேண்டும். தேர்வாணையத்தின் இணையதளத்தில் ஆன்லைன் மூலமாக ரூ.30/- பதிவுக்கட்டணத்துடன் ஒவ்வொரு தேர்வுக்கும் ரூ.50/- தேர்வுக்கட்டணமும் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். (புது தில்லியை தேர்வு மையமாக தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது)

(அ). விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் மூலமாக விவரங்களைப் பதிவு செய்யுமுன், தான் விண்ணப்பிக்க விரும்பும் தேர்வுகளுக்குரிய கட்டணத்தை, அறிவிக்கையின் பிற்சேர்க்கை 3-ல் பட்டியலிடப்பட்டுள்ள அஞ்சலகங்கள் ஏதேனும் ஒன்றிலிருந்து பெறப்பட்ட அஞ்சலகப் பற்றுச் சீட்டைக் கைவசம் வைத்திருக்க வேண்டும். <u>தேர்வுகளுக்கான மொத்தக் கட்டணத்துடன், பதிவுகட்டணமான ரூ.30/- ம் அஞ்சலகக் கட்டணம் ரூ.12/-ம் சேர்த்து அதற்கேற்ப அஞ்சலகப் பற்றுச் சீட்டு பெறப்பட வேண்டும். (புது தில்லியைத் தேர்வு மையமாகத் தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தாது).</u>

ஆ) புது டில்லியில் உள்ள விண்ணப்பதாரர்கள் தேர்வுக்குரிய கட்டணத்தை, அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் (Scheduled Banks) / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஏதாவது ஒன்றில் இருந்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு சென்னையில் செலுத்தத்தக்க குறுக்குக் கோடிட்ட வங்கிக் கணக்கு வைத்துப் பணம் பெறுபவர் கேட்பு வரைவோலையாக மட்டுமே (Crossed Account Payee Demand Draft) செலுத்தவேண்டும்.

**<u>ஆன்லைனில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான வழிமுறைகள்</u>**

1. Image scanners வசதியுள்ள இணையதள மையங்கள் அல்லது தேசிய தகவல் மையங்களை (NIC) அணுகவும்.
2. ஆன்லைனில் பதிவு செய்வதற்கு முன், அறிவிக்கை நாளுக்கு பிறகு பெறப்பட்ட அஞ்சலக பற்றுச் சீட்டு மற்றும் பாஸ்போர்ட் அளவிலான நிழற்படத்தை தயாராக வைத்திருக்கவும்.
3. தேர்வுக் கட்டணம், தேர்வுகளுக்கான குறியீட்டு எண்கள், அஞ்சலகங்களின் பெயர்கள் ஆகிய விவரங்கள் தேர்வாணையத்தின் இணைய தளத்தில் உள்ளன.
4. ஆன்லைனில் கொடுக்கப்பட்டுள்ள கலங்களை (Columns) பூர்த்தி செய்ய வேண்டும்.
5. அஞ்சலகப் பற்றுச்சீட்டிலுள்ள விவரங்களை தெளிவாக குறிப்பிட வேண்டும். (விண்ணப்பதாரர்களால் குறிப்பிடப்படும் விவரங்கள் தேர்வுக்கு முன்னர் அஞ்சலகங்களிலிருந்து பெறப்படும் விவரங்களுடன் ஒப்புநோக்கப்படும். விவரங்கள் குறையுள்ளவையாக காணப்பட்டால் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)
6. ஆன்லைனில் விண்ணப்பிக்கும் போது கணினியால் வழங்கப்படும் தனித்துவ விண்ணப்ப எண்-ஐ (Unique Online Application No.) தவறாமல் குறித்து வைத்துக் கொள்ளவும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப விவரங்களடங்கிய அச்சுப்பிரதியை எடுத்து அதில் உள்ள விவரங்களை சரிபார்த்தப் பின்னர், அத்துடன் இணைந்திருக்கும் ஆளறிச் சான்றிதழின் பகுதியை கிழிக்கவும். (விண்ணப்ப எண் அல்லது பிறந்த தேதியினை கொடுத்து இதனை பெறலாம்)
8. அதில் அண்மையில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான நிழற்படத்தை ஒட்டி, அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கட்டத்தில் கையொப்பமிடவும்.
9. ஆளறிச் சான்றிதழில் ஒட்டப்பட்டுள்ள நிழற்படம் மற்றும் கையெழுத்தினை ஸ்கேன் செய்து JPG format (Single image) தனியாக பதிவு செய்து கொள்ளவும்.
10. நிழற்படத்தின் அளவு 20 kbs க்கு மிகாமலும் 300 x 600 pixels–க்கு குறையாமலும் நல்லத் தரத்துடன் உள்ளதா என்பதை உறுதி செய்துக் கொள்ளவும்.
11. கோப்பின் அளவு 20 kb- ஐ தாண்டும் பட்சத்தில் Scanner settings (அதாவது DPI resolution, colours etc. ) சரிசெய்து கோப்பின் அளவினை

குறைக்கவும். அல்லது Ms Paint பயன்படுத்தியும் கோப்பின் அளவினை குறைக்கவும்.

12. மேற்கண்ட விவரங்களை இணையதளத்தில் மேலேற்றம் (Upload) செய்து ஆன்லைன் பதிவினை முடிக்கவும்.

**<u>நிழற்படம் ஒட்டப்படாமலோ அல்லது கையொப்பமிடப்படாமலோ பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.</u>**

13. ஆளறிச்சான்றிதழில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமிடப்பட்ட நிழற்படத்தில் அன்னார் பணிபுரியும் அலுவலகத்தின் உடனடி மேலதிகாரியால் சான்றொப்பமிட வேண்டும். மற்றும் ஆளறிச் சான்றிதழின் பின்பக்கத்தில் அஞ்சலக பற்றிச்சீட்டினை ஒட்டி அதனை தாங்கள் எழுதும் கடைசி தேர்வு நாளன்று அறைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

14. **<u>ஆளறிச்சான்றிதழினை ஒப்படைக்காத விண்ணப்பதாரரின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.</u>**

15. தேர்வாணையத்திற்கு விண்ணப்ப படிவங்களோ அல்லது ஆவணங்களோ அனுப்ப தேவையில்லை. ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தல் மட்டுமே போதுமானது. (இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மொழித் தேர்விற்கும் மற்றும் **SAS-Part-II(a), II(b)** மற்றும் **II(c)** மற்றும் பொதுக்கல்வித் தேர்வு General Educational Test விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களை தவிர்த்து)

16. **<u>தனி நுழைவுச் சீட்டுகள் ஏதும் விண்ணப்பதாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் தேர்வாணையத்தால் அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது.</u>**

17. பதிவிறக்கம் செய்யப்பட்ட நுழைவுச்சீட்டு மற்றும் ஆளறிச் சான்றிதழ் இல்லாமல் தேர்வுக்கூடத்திற்கு வரும் விண்ணப்பதாரர்கள் தேர்வெழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**<u>குறிப்பு:</u>**

*விண்ணப்பதாரர்கள் தாங்கள் சமர்ப்பித்த விண்ணப்பித்தினை உறுதி செய்துக்கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் தங்களின் தனித்துவ ஆன்லைன் விண்ணப்ப எண்ணை பயன்படுத்தி தங்கள் விண்ணப்பத்தின் நிலையினை (Status) சரிபார்த்துக் கொள்ளலாம்.*

*தகவல் பரிமாற்றத்தின் போது ஏற்படும் குறைபாடுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பல்ல.*

*விண்ணப்பதாரர்கள் தங்களது தனித்துவ விண்ணப்ப எண்ணை பத்திரப்படுத்திக்கொள்ளவும்.*

*மேலும் விவரங்களுக்கு தேர்வாணையத்தின் குறைதீர்க்கும் மைய எண் 1800 425 1002ஐ தொடர்பு கொள்ளவும்.*

2. தேர்வுமையங்கள்: துறைத் தேர்வுகள் கீழ்க்கண்ட மையங்களில் நடைபெறும்.

| மையத்தின் பெயர் | குறியீட்டு எண் | மையத்தின் பெயர் | குறியீட்டு எண் | மையத்தின் பெயர் | குறியீட்டு எண் |
|---|---|---|---|---|---|
| அரியலூர் | 030 | நாகப்பட்டினம் | 011 | திருவண்ணாமலை | 022 |
| சென்னை | 001 | நாகர்கோவில் | 119 | திருச்சிராப்பள்ளி | 025 |
| கோயம்புத்தூர் | 002 | நாமக்கல் | 012 | திருநெல்வேலி | 026 |
| கடலூர் | 003 | பெரம்பலூர் | 014 | திருவள்ப்ர் | 021 |
| தர்மபுரி | 004 | புதுக்கோட்டை | 015 | திருவாரூர் | 023 |
| திண்டுக்கல் | 005 | இராமநாதபுரம் | 016 | தூத்துக்குடி | 024 |
| ஈரோடு | 006 | சேலம் | 017 | உதகமண்டலம் | 013 |
| காஞ்சிபுரம் | 007 | சிவகங்கை | 018 | வேலூர் | 027 |
| கரூர் | 009 | தஞ்சாவூர் | 019 | விழுப்புரம் | 028 |
| கிருஷ்ணகிரி | 031 | தேனி | 020 | விருதுநகர் | 029 |
| மதுரை | 010 | திருப்பூர் | 032 | புதுடில்லி | 175 |

<u>குறிப்பு</u> 1. விண்ணப்பதாரர்கள் தாங்கள் பணிபுரியும் மாவட்டத்தின் தலைநகரில் தான் தேர்வு எழுத வேண்டும். வேறு தேர்வு மையத்தில் தேர்வு எழுத வேண்டுமெனில் அதற்குத் தேர்வாணையத்தின் தனிப்பட்ட அனுமதி பெறவேண்டும்.. இந்த நிபந்தனை பணியில் இல்லாதவர்களுக்கும், தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கும் பொருந்தாது.

2. **<u>தேர்வு மையத்தை மாற்றுதல்</u>**:- விண்ணப்பதாரர் தான் பணிபுரியும் இடத்தைச் சேர்ந்த தேர்வு மையத்திலேயே தேர்வு எழுத வேண்டும்.. பணியிட மாற்றம், பயிற்சி, வேற்றுப்பணி போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மட்டுமே தேர்வுமையத்தை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுவார். ஆனால் **<u>அதற்கான கோரிக்கை அலுவலகத் தலைவர் மூலமாகவோ, தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழுடனோ தேர்வாணைய அலுவலகத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் இறுதி நாளிலிருந்து 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும்</u>**. அவ்வாறில்லாமல் பெறப்படும் மைய மாற்றத்திற்கான கோரிக்கை கவனிக்கப்பட மாட்டாது.

3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அனுமதியின்றி தேர்வுக்குரிய இடத்தை மாற்றிக்கொள்ளும் விண்ணப்பதாரரது தேர்வு செல்லாததாக்கப்படும்.

3. **<u>தேர்வின் கால அட்டவணை</u>**:- முற்பகல் தேர்வு காலை 9.00 மணிக்கும் பிற்பகல் தேர்வு மதியம் 2.30 மணிக்கும் தொடங்கும். (கால அட்டவணை தேர்வாணைய செய்தி அறிவிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது).

4. **<u>தேர்வுக் கட்டணம்</u>:-** துறைத் தேர்வில் அடங்கியுள்ள ஒவ்வொரு தேர்வுக்கும் செலுத்தப்பட வேண்டிய தேர்வுக் கட்டணம் பிற்சேர்க்கை-2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

<u>குறிப்பு</u>:-

1. விண்ணப்பதாரர்கள் கால அட்டவணையில் உள்ள எத்தனை தேர்வுகளையும் எழுதுவதற்கு விண்ணப்பிக்கலாம். ஒரு விண்ணப்பதாரர், ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வுகளை எழுத விண்ணப்பித்திருந்து, அதற்காக இவ்வலுவலகத்திலிருந்து அத்தேர்வுகளுக்குரிய தேர்வு நுழைவுச் சீட்டு அனுப்பப்பட்டிருந்தாலும், தனது விருப்பப்படி அத்தேர்வுகளில் ஏதாவது ஒரு தேர்வை மட்டுமே எழுதுவதற்கு அவர் அனுமதிக்கப்படுவார்.

2. ஏதாவது காரணத்தினால், விண்ணப்பதாரருடைய தேர்வு முடிவின் நம்பகத்தன்மையில் தேர்வாணையம் மனநிறைவு கொள்ளாவிடில், அவர் எழுதிய தேர்வின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களின் மறுதேர்வுக்கு அவர் உட்படுத்தப்படுவார். இம்மறுதேர்வின் முடிவுகளின் அடிப்படையில்தான் அவருடைய வெற்றி அல்லது தோல்வி நிர்ணயிக்கப்படும்.

5. **<u>தேர்வுகளுக்கான பாடத்திட்டம்:-</u>** அதிக அளவு மதிப்பெண்கள், தேர்ச்சி பெற தேவையான குறைந்த அளவு மதிப்பெண்கள், தேர்வின் கால அளவு ஆகிய விவரங்கள் 18.12.1991, 28.05.1997 ஆகிய நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் (சிறப்பு வெளியீடு) பாகம் II-பிரிவு 2 மற்றும் 16.07.1992, 16.11.1997, 01.02.2002 ஆகிய நாளிட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையச் செய்தி வெளியீடுகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைத் தேர்வு, அரசாணை (நிலை) எண். 243, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 27.07.2000-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி நடத்தப்படும்.

6. விண்ணப்பதாரர்கள், மொழி பெயர்ப்புத் தேர்வு, மொழித் தேர்வு ஆகியவற்றிக்கு விண்ணப்பத்தில் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழியில்தான் விடையளிக்க வேண்டும். பிற துறைத் தேர்வுகளை ஆங்கிலத்தில் அல்லது தமிழில் அல்லது விடைத் தாளின் ஒரு பகுதியை ஆங்கிலத்திலும் மறுபகுதியைத் தமிழிலும் கலந்து விடையளிக்க அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. பொதுக் கல்வித் தகுதித் தேர்வு (எஸ். எஸ். எல். சி. பாடத்திட்டத்தின்படி)- கீழே உள்ள அட்டவணையின் கலம் (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள், அதற்கெதிராகக், கலம் (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக கலம் (4)-ல் கூறப்பட்டுள்ள தகுதியுடைய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழுடன் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

**அட்டவணை**

| வரிசை எண் | நபர்கள் | காரணம் | சான்றிதழ் அளிக்க தகுதியுடைய அலுவலர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | சார்நிலைப் பணிகளில் பணிபுரியும் குறைந்த பட்ச பொதுக்கல்வித் தகுதி பெறாதவர்கள் | குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி நிர்ணயம் செய்யப்பட்ட பதவிகளுக்கு மாறுதலில் அல்லது பதவி உயர்வில் செல்ல தகுதி பெறுவதற்கு | சம்பந்தப்பட்ட துறைத்தலைவர் |
| 2. | உள்ளாட்சிகள், மாநகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றின் பணியாளர்கள் | மேற்படி | அந்தந்த மாவட்ட ஆட்சியர் (ஊராட்சி வளர்ச்சி) அல்லது ஆணையர்கள்/ கோட்டாட்சியர்கள் |
| 3. | வாரிய உயர்நிலைப்பள்ளிகள், மேனிலைப்பள்ளிகள் ஆகியவற்றின் பணியாளர்கள் | மேற்படி | அந்தந்த மாவட்டங்களின் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் |
| 4. | வேளாண் விற்பனைக் குழுவின் பணியாளர்கள் | மேற்படி | செயலாளர், வேளாண் விற்பனைக் குழு |
| 5. | தேசிய மாணவர் படைப்பிரிவில் பணியாற்றும் குறைந்தபட்சக் கல்வித் தகுதி இல்லாத பணியாளர்கள் | மேற்படி | இயக்குநர், தேசிய மாணவர் படை, சென்னை |
| 6. | வட்டார நூலக ஆணைக் குழுக்களில் பணியாற்றும் குறைந்தபட்சக் கல்வித் தகுதி பெறாத பணியாளர்கள் | மேற்படி | தலைவர், வட்டார நூலக ஆணைக் குழு, சென்னை |
| 7. | அரசுக்கு சொந்தமான கழகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் (State | மேற்படி | பணி நியமனம் செய்யும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | owned Corporations) | | |

**குறிப்பு:** 1. வருவாய்த் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் அம்மாவட்ட ஆட்சியரிடமிருந்தும், வணிக வரித் துறையில் பணி புரியும் அலுவலர்கள் சம்பந்தப்பட்ட வணிகவரித்துறை துணை ஆணையரிடமிருந்தும், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறையில் பணி புரியும் அலுவலர்கள் அத்துறையின் துணை இயக்குநரிடமிருந்தும் சான்றிதழைப் பெற வேண்டும்.

2. பொதுக் கல்வித் தகுதித் தேர்வுக்கு (S.S.L.C. தரம்) விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், தங்கள் துறைத் தலைவரால் சான்றொப்பமிடப்பட்ட தகுதிச் சான்றுடன் கீழ்க்கண்ட படிவத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்து தங்கள் துறைத் தலைவரின் சான்றொப்பத்தினைப் பெற்று தேர்வு நாளன்று தேர்வுக் கூடத்திற்கு எடுத்து வரவேண்டும். தேர்வு முடிந்தவுடன் இதனை அறைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**FORMAT**

| | |
|---|---|
| **1. Name of the Post held by him/her** | |
| **2. Whether his/her services have been regularized or whether he has been appointed temporarily and the service to which he /she belongs to.** | |
| **3. Basic pay in the Post held by him/her.** | |
| **4. Period of Service rendered so far in the Post.** | |
| **5. Highest Educational Qualification (attested copy of Mark List to be enclosed)** | |
| **6. Whether provincialised or non-Provincialised** | |
| **7. Reason for which he/she has applied for admission to General Educational Test of the SSLC Standard.** | |

**Place:** **Signature with Designation:**

**Office Seal :**

8.(i). **இரண்டாம் நிலை மொழித் தேர்வு (வாய்மொழித் தேர்வு கொண்டது) -** தமிழ்நாடு அரசுப்பணியில் சேர்ந்த / சேர விழையும் நபர்கள் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி வரை, தமிழ்

மொழியை பாட மொழியாகவோ, மற்றும் பயிற்று மொழியாகவோ கற்காமல், வேறு மொழியைக் கற்றவர்கள், அரசுப்பணியில் தமிழ் மொழியில் போதிய அறிவு கொண்டவர்களாக இருக்க வேண்டும். எனவே, மேற்படி தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள், தமிழ் அல்லாத வேற்று மொழியை பாட மொழியாகவோ அல்லது பயிற்று மொழியாகவோ பயின்றுள்ளனர் என்பதற்கு ஆதாரமாக, எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் அவர்களது பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி சான்றிதழ்கள் / மாற்றுச் சான்றிதழ்களின் நகல்களை நேர்முகத் தேர்வின் போது தேர்வாணையத்திற்கு கொண்டுவந்து சமர்ப்பிக்க வேண்டும்.

(ii). **<u>மூன்றாம் நிலை மொழித் தேர்வு</u>** - தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகள் அரசு அருங்காட்சியகங்களில் Assistant Curator பதவியில் உள்ளவர்களும் தமிழ், இந்தி, கன்னடம், மலையாளம், தெலுங்கு மற்றும் உருது ஆகிய மொழிகளில், பதிவுத்துறையில் துணைப்பதிவாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர் பதவியில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். எனவே, இவ்விண்ணப்பதாரர்கள் தாங்கள் பணிபுரியும் விவரத்தை தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

iii) மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே இத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் முழுமையாக நிராகரிக்கப்படும் / அல்லது இத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவராக்கப்படுவார்கள்.

iv) இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மொழித் தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், பதிவேற்றம் செய்து, பின்னர் பதிவிறக்கம் செய்து பெறப்படும் விண்ணப்பம் மற்றும் ஆளறிச் சான்றிதழ் ஆகியவற்றின் நகலினை தேர்வாணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். (தேர்வு குறியீட்டு எண். 001 & 209, 210, 211, 212, 213, 214 & 215)

9. Subordinate Account Service தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் SAS Part-I(a) & Part-I(b) ஆகிய தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்ற பின்னரே SAS-Part-II(a), II(b) மற்றும் II(c) ஆகிய தேர்வுகளை எழுத தகுதியுடையவராவர். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் தாங்கள் தேர்ச்சி பெற்ற விவரத்தினை அவசியம் பதிவு செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (தே.கு.எண்.131, 148, 85, 115 மற்றும் 164)

10. <u>பார்வையற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்கள் அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இதர மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு (காது கேளாதோர், வாய் பேசாதோர், உடல் ஊனமுற்றவர்கள்) தேர்வு எழுத உதவியாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.</u>

(i) மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் தலைமைக் கண்காணிப்பாளரின் நேரடிப்பார்வையின் கீழ், கீழ்தளத்தில் தனியான ஓர் அறையில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவர்கள் **<u>தேர்வு எழுதுவதற்கு ஒரு மணி நேரம் கூடுதலாக வழங்கப்படும்.</u>**

(ii) தேர்வெழுதுவதற்கு உதவியாளர்களை முதன்மை கண்காணிப்பாளர் ஏற்பாடு செய்வார். அவர்களுக்கு ஊதியம் தேர்வாணையத்தால் வழங்கப்படும்.

(iii) தேர்வின் முடிவில், விண்ணப்பதாரர் கூறியதைத்தான் உதவியாளர் எழுதியுள்ளார் என்பதை உறுதி செய்யும் பொருட்டு, உதவியாளர் விடைத்தாளில் தான் எழுதியதைப் படித்துக்காட்டுவார். இதற்கான சான்றிதழை விண்ணப்பதாரர் தனது பெருவிரல் ரேகை பதிவு செய்து / கையொப்பமிட்டு அளிக்க வேண்டும்.

(iv) விடைத் தாள்களைக் கைகளால் பிடித்து அதன் பக்கங்களைத் திருப்புவதற்கு இயலாத விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு உதவியாளர் (Mazdoor) ஒருவர்
உதவியுடன் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார். இவ்வாறு உதவி செய்வதற்கு எழுத்தறிவு இல்லாத ஒருவரை (Uneducated Mazdoor) விண்ணப்பதாரரே தன் சொந்த
செலவில் நியமித்துக் கொள்ள வேண்டும்.

11. விண்ணப்பதாரர் எவரேனும் தேர்வுக் கூடங்களில் தலைமைக் கண்காணிப்பாளரிடம் அல்லது கண்காணிப்பாளர்களிடம் அல்லது கண்காணிப்புப் பணியிலிருக்கும் பிற அலுவலரிடம் முறையாக நடந்து கொள்ளத் தவறினாலோ, எந்த வகையிலும் ஒழுங்கீனமாகச் செயல்பட்டாலோ அவரது விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும். அத்தகைய விண்ணப்பதாரர் மீண்டும் எந்தவொரு தேர்வும் எழுதுவதினின்று நிரந்தரமாக அல்லது தேர்வாணையம் தீர்மானிக்கும் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு விலக்கி வைக்கப்படுவார். விண்ணப்பதாரர்கள் தேர்வுகள் குறித்து நேரிடையாகவோ, கடிதம் மூலமாகவோ ஆதரவு நாடினாலும், தேர்வாளர், அல்லது தேர்வாணைய உறுப்பினர் அல்லது தேர்வாணையத்தின் பணியாளர்கள் மீது செல்வாக்கைச் செலுத்த முற்பட்டாலும், அன்னாரின் சார்பாக அவர்களது உறவினரோ, நண்பரோ, ஆதரவாளரோ, அலுவலரோ இவ்வாறு முயற்சி மேற்கொண்டாலும் விண்ணப்பதாரர்களுக்கு இத்தண்டனை விதிக்கப்படும். தங்களின் தேர்வு முடிவு குறித்துத் தேர்வாளர்களின் பரிவினைப் பெறுவதற்காக விடைத்தாளில் வேண்டுகோள் விடுக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் இத்தண்டனை விதிக்கப்படும்.

12. தேர்வாணையத்திற்கு அனுப்பப்படும் எவ்விதத் தகவலும், எழுத்து மூலமாக, விண்ணப்பதாரருக்கு ஒதுக்கப்பட்ட விண்ணப்ப எண், விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ள தேர்வின் பெயர், பதிவு எண், தேர்ந்தெடுத்துள்ள தேர்வு மையம் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டு தேர்வாணையத்தின் செயலாளருக்கு மட்டுமே முகவரியிடப்பட வேண்டும். மறுமொழி வேண்டியிருப்பின், தன் முகவரியுடன், போதிய அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட உறையும் அனுப்பப்பட வேண்டும்.

13. துறைத் தேர்வு எழுதுவதற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரர், தேர்வுகள் தொடர்பாக நடைமுறையிலிருக்கும் விதிகளுக்கு உட்பட்டவராவார்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

இணையதளம் :www.tnpsc.gov.in
மின்னஞ்சல் : coetnpsc.tn@nic.in
தொலைபேசி : 044 – 25300 300
நிகரி : 044 – 25300 598
**Toll Free No: 1800 425 1002**

Date: 22.02.2017